



“நீரின்றி அமையா இவ்வுலகு மீனின்றி அமையா நல்வுணவு”









தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகம்





மேதகு ஆளுநர் சி.எச். வித்யாசாகர் ராவ் அவர்கள் தலைமையில் 01.07.2017 அன்று நடைபெற்ற பல்கலைக்கழக மூன்றாவது பட்டமளிப்பு விழா



முகவுரை

தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகமானது **மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா** அவர்களால் நாகப்பட்டினத்தை தலைமையிடமாகக் கொண்டு துவக்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இப்பல்கலைக்கழகத்தின் கீழ் பொன்னேரி மற்றும் தூத்துக்குடியில் மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள் இயங்கி வருகிறது. மேலும், ஆசியாவிலேயே முதன்முதலாக மீன்வளப் பொறியியல் கல்லூரியும் நாகப்பட்டினத்தில் இயங்கி வருகிறது. இதை தவிர தஞ்சாவூரை தலைமையிடமாக கொண்டு வளங்குன்றா நீர்வாழ் உயிரின வளர்ப்பு இயக்குனரகம் செயல்பட்டு வருகிறது. இதன் சார்பு மையங்கள் இராமநாதபுரம், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கணபதிபுரம் மற்றும் பறக்கை, கிருஷ்ணகிரி மாவட்டத்திலுள்ள பாரூர் மற்றும் பவானிசாகர் ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகிறது. சென்னை மாதவரத்தில் மீன்வளத் தொழில்நுட்பம், பயிற்சி மற்றும் தொழில் முனைவு காப்பக இயக்குனரகங்கள், மீன்வளர்ப்பு மற்றும் மீன் பிடித்தல் மற்றும் பதப்படுத்துதல் என இரண்டு பிரிவுகளில் செயல்பட்டு வருகின்றன. இவை மட்டுமன்றி, சென்னை அசோக் நகரில் மீன்வளத்துறை பணியாளர்களுக்கான பல்கலைக்கழகப் பயிற்சி மையம் இயங்கி வருகிறது. இப்பல்கலைக்கழகம் மீன்வள அறிவியலில் தேசிய மற்றும் மாநில அளவில் ஆராய்ச்சி மேம்பாடு மற்றும் விரிவாக்கப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. தேசிய மற்றும் சர்வதேச மனித வள மேம்பாடு மற்றும் அறிவியல் ஆராய்ச்சி நிறுவனங்களுடன் இணைந்து பல்வேறு நிலைகளில் மேம்பாட்டு பணிகளை செயலாற்றி வருகிறது.

நடப்பாண்டில் இப்பல்கலைக்கழகத்தின் கீழ், சென்னை வாணியஞ்சாவடியில் புதிதாக ஒரு முதுநிலைக்கல்வி நிலையம் துவங்கப்பட்டுள்ளது. இதில் ஏழு முனைவர் மற்றும் முதுநிலை பட்டப்படிப்புகளும் ஒரு இளநிலை பட்டப்படிப்பும் நடத்தப்படவுள்ளது. தமிழக மீனவர் மற்றும் மீன் வளர்ப்போர் நலனுக்காக பின்வரும் உட்கட்டமைப்பு வசதிகள் இப்பல்கலைக்கழகத்தில் செயல்பட்டு வருகின்றன:

(அ) மாதவரம், பொன்னேரி, வாணியஞ்சாவடி, பழவேற்காடு, தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினத்தில் மீன்/இறால் வளர்ப்பிற்காக நீர் மற்றும் மண் பரிசோதனை ஆய்வகங்கள்.

(ஆ) தூத்துக்குடி, பொன்னேரி, மாதவரம் மற்றும் நாகப்பட்டினத்தில் மீன்/இறால்களுக்கு ஏற்படும் நோய் மூலக்கூறு கண்டறிதல் ஆய்வகங்கள்.

(இ) பொன்னேரி மற்றும் நாகப்பட்டினத்தில் நடமாடும் மீன்/இறால் வளர்ப்பிற்கான நீர்/மண் பரிசோதனை ஆய்வகங்களும், தூத்துக்குடி மற்றும் பொன்னேரியில் மீன் உணவு பொருட்களின் தர பரிசோதனை ஆய்வகங்கள்.

மேலும், தற்போதைய அரசின் முன்னோடித் திட்டங்களான வண்ண மீன் வானவில் பூங்கா, ஆழ்கடல் மீன்பிடிப்பு பயிற்சி மற்றும் மேலாண்மை மற்றும் ஒருங்கிணைந்த நீர் வாழ் உயிரின வளர்ப்பு தொழில் பூங்கா அமைத்தல் ஆகிய திட்டங்களில் அரசுடன் இணைந்து தொழில் நுட்ப வழிகாட்டுதல் மற்றும் பயிற்சி அளித்தல் ஆகிய சேவைகளை அளித்து வருகிறது. அறிவியல் அடிப்படையிலான மீன்வள முன்னேற்றத்தால் மக்களின் உணவு மற்றும் ஊட்டச்சத்துத் தேவையைப் பூர்த்தி செய்து அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துதல்" என்ற மேலான இலக்கினை நோக்கி இப்பல்கலைக்கழகம் செயல்பட்டு வருவதை உணர்த்தும் வகையில் "***நீரின்றி அமையா இவ்வுலகு மீனின்றி அமையா நல்லுணவு***" என்னும் இக்கையேட்டினை தங்கள் பார்வைக்கு அளிப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களின் உண்மை விசுவாசி

D. ஜெயக்குமார்

மீன்வளம், நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை அமைச்சர்

இணை வேந்தர் - தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகம்







மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் துணை வேந்தருடன் பல்கலைக்கழகத்தில் நடைபெற்று வரும் புதிய உட்கட்டமைப்பு உருவாக்கல் பணிகளை ஆய்வு செய்கிறார்













சிறந்த முறையில் மீன்வள அறிவியல் தொழில்நுட்ப கல்வி வழங்கிட நவீன கணினி மயமாக்கப்பட்ட வகுப்பறைகள், மேம்படுத்தப்பட்ட நூலக வசதிகள், கணினி பயிற்சி மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.



மீன் வளர்ப்போருக்கு உதவிடும் வகையில் வளர்ப்பு மீன்களில் ஏற்படும் நோய்களை கண்டறியவும் அதற்கான சிகிச்சை மற்றும் மேலாண்மை ஆலோசனைகளை அவர்களின் பண்ணைகளுக்கே சென்று வழங்கிட நடமாடும் மீன்நல ஊர்திகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.









மாணவர்கள் கற்பதோடு நிற்காமல் அவர்கள் உடல் நலமும் மனநலமும் மேம்படும் வகையில் விளையாட்டு, யோகா, கலை நிகழ்ச்சி போட்டிகள் ஆகியவை நடத்தப்படுகின்றது.

முத்தான வாழ்வுக்கு சத்தான மீனுணவு !

ஒமேகா 3 மற்றும் வைட்டமின்கள் நிறைந்த நவீன மீன் உணவு வகைகளான மீன் குர்குரே, பார்பிக்யு மீன், மீன் பார், மீன் புரோ பிரட், மீன் ஊறுகாய் தயாரிப்பில் மீனவ தொழில் முனைவோர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.









1



2





3

FCRI students bag top ranks in ICAR-JRF examinations

STAFF REPORTER

THOOTHUKUDI:, JUNE 29, 2016 00:00 IST
UPDATED: SEPTEMBER 16, 2016 16:58 IST

SHARE ARTICLE PRINT A | A | A

J.S. Jenishma, a student of Bachelor of Fisheries Science (B.FSc) from Fisheries College and Research Institute (FCRI) has bagged the second rank in the All India Entrance Examination for admission to post graduate degree programme, (AIEEA-PG-2016). S. Kesavan, another student of FCRI, got first place in the reserved category at the All India level (ninth overall), and 11 others were qualified to receive the ICAR Junior Fellowship, according to a statement from G. Sugumar, Dean of FCRI, on Monday.

1. தேசிய அளவில் சிறந்த மீன்வள அறிவியல் கட்டுரை எழுதும் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்
2. அறிவியல் நகர கண்காட்சியில் சிறந்த மீன் வளர்ப்பு மாதிரி அமைத்து வெற்றி பெற்ற மாணவர்கள்
3. தேசிய அளவில் முதுநிலை மீன்வள அறிவியல் கல்வி கற்பதற்கான போட்டித் தேர்வில் சிறப்பு வெற்றி பெற்ற மாணவர் மற்றும் மாணவி





நவீன மீன் மற்றும் இறால் வளர்ப்பு தொழில் நுட்பம் மூலம் பல்கலைக்கழகத்தில் வளர்க்கப்பட்ட மீன் மற்றும் இறால்கள் அறுவடை செய்யப்பட்டது











ஆய்வுக் கூடத்தில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ள ஆயத்தமாகும் மாணவ மணிகள்









மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஆகியோர்களின் ஆராய்ச்சியின் பயனாக உருவான திட்டங்களின் செயல்பாடுகள்





மீன்வளம் சார்ந்த பயனாளிகள் பயன்படும் வகையில் பல்வேறு வகையிலான தேசிய மற்றும் சர்வதேச கருத்தரங்குகள்















மீன்வளம் சார்ந்த பயனாளிகள் பயன்படும் வகையில் பல்வேறு வகையிலான தேசிய மற்றும் சர்வதேச பயிற்சிப் பட்டறைகள், கலந்துரையாடல்கள் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளும் நிகழ்ச்சிகள்











பல்கலைக்கழக சமூக சேவை முயற்சியின் மூலமாக மரம் நடுதல், இரத்த தானம், கடற்கரையை சுத்தம் செய்தல் ஆகியவற்றில் பங்கெடுக்கும் மாணவ மாணவியர்







பல்கலைக்கழகத்தின் இளநிலை, முதுநிலை மற்றும் முனைவர் பட்டப்படிப்புகளுக்கு இலகுவான மற்றும் ஒளிவு மறைவற்ற முறையில் சேர்க்கை நடைபெறும் வகையில் இணையவழி மாணவர் சேர்க்கை வசதி நடைமுறைப் படுத்தப்படுகிறது









பல்கலைக்கழக வசதிகளை பார்வையிடும்
தேசிய மற்றும் சர்வதேச வல்லுநர்கள்
மற்றும் அதிகாரிகள்



பொதுமக்கள் மற்றும் மீன்வளம் சார்ந்த பயனாளிகளுக்கு உதவிடும் வகையில் ‘‘நோ யுவர் ஃபிஷ்’’ என்ற கைபேசி செயலி வெளியிடப்பட்டது



கூண்டுகளில் மீன் வளர்ப்பு மூலமாக கொளவாய் ஏரியில் வளர்க்கப்பட்ட மீன்கள் அறுவடை செய்யப்பட்டது



பல்கலைகழக பணியாளர் பயிற்சி இயக்குனரகம்



சினைஇறால் வங்கி



கடல்மீன் குஞ்சு பொரிப்பகம்









சென்னை மாதவரத்தில் அலங்கார மீன் வளர்ப்பை உத்வேகப் படுத்த மாநில அரசின் புதுமைத் திட்டம் மற்றும் தேசிய வேளாண் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ்



ரூபாய் பதிமூன்று கோடி செலவில் உருவாகிவரும் இந்தியாவின் முதல் வண்ணமீன் வானவில் பூங்கா வளாகம்



மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தூத்துக்குடி.



மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், பொன்னேரி.



University Campus
1. FCRI, Thoothukudi
2. FCRI, Ponneri
3. CoFE, Nagapattinam
4. IPGS, OMR,Chennai

DCeSA Centers
1. Thanjavur
2. Ramanathapuram
3. Kanniyakumari
4. Krishnagiri
5. Erode
6. Kanniyakumari - Parakai

DFTTIC – Aquaculture
1. Kancheepuram – Muttukadu
2. Chengalpattu
3. Poondi
4. Madhavaram (ARFF)
5. Madhavaram (ARTP)
6. Madhavaram (ARM)

DFTTIC – Post Harvest
1. Royapuram
2. Thoothukudi (Shore lab)
3. Thoothukudi
4. Ponneri
5. Ponneri

Off - Campus Facilities of Colleges
1. ARFF, Madhavaram
2. BRFF, Vaniyanchavadi (OMR)
3. PRFF, Pulicat
4. MRFF, Tharuvaikulam

தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகம்